

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவ மாணவிகளிடம் அடிப்படை வசதிகள் குறித்து உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோ.வி. செழியன் கேட்டறிந்தார். உடன் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் , மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, கல்லூரி கல்வி மண்டல இணை இயக்குனர் அ. மலர், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, கே.வி.குப்பம் ஒன்றிய குழு தலைவர் லோ. ரவிச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மதுரை கிழக்குத் தொகுதியில்

# 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் பொதுமக்களிடம் குறைகள் கேட்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி நேரில் சந்தித்தார்!

*மதுரை, ஜன.3 -*

மதுரை கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட ஒத்தக்கடை, திருமோகூர், நரசிங்கம், அரும்பனூர், கருப்பாயூரணி, அப்பன் திருப்பதி, குலமங்கலம் உள்ளிட்ட சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் சென்று பொதுமக்களை சந்தித்து அவர்களது குறைகளை கேட்டறிந்ததுடன் முடிவுற்ற திட்ட பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து மக்களின் குறைதீர்த்தார், மேலும் செல்லும் கிராமங்கள் எல்லாம் பெண்கள் ஆரத்தி எடுத்தும் மலர்கள் தூவியும் முரசு கொட்டும் முழங்க உற்சாக வரவேற்பு கொடுத்தார்கள் அதன் விபரம்:

மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருமான பி.மூர்த்தி, மதுரை கிழக்கு தொகுதியில் சுமார் 100க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு நேரில் சுற்றுப் பயணம் சென்று மக்களிடம் குறைகளை கேட்டு அவர்களது குறைகளை உடனடியாக தீர்க்கும் வண்ணம் அதிகாரிகளையும் உடன் அழைத்துச் சென்றார்.

அனைத்து துறை அதிகாரிகள் உடன் சென்றதால் மக்கள் கோரிக்கைகள் உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுத்தார். இதனால் மக்கள் பெரும் மகிழ்ச்சி கொண்டார்கள்

இந்நிகழ்ச்சியில் பேசிய வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி இது மக்களுக்கான ஆட்சி கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்கள் நலன் காக்கும் பல திட்டங்களை அறிவித்து திறம்பட செயலாற்றி வருகின்றார்.

குடிநீர் வசதி, சாலை வசதி, கழிவுநீர் வாய்க்கால் வசதி என அடிப்படை வசதிகளை உடனுக்குடன் செய்து மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளார்

பெண்கள் முன்னே ற்றம், மாணவ, மாணவிகள் முன்னேற்றம், விவசாய பெருங்குடி மக்கள் என அனைவருக்கும் நாள்தோறும் பல உதவிகளை செய்து வருகின்றார்

மகளிர் சுய உதவி குழுக்களுக்கு பல கோடி ரூபாய் மானிய கடன் வழங்கி சிறப்பித்து வருகின்றார், மேலும் தள்ளுபடி செய்யப்பட்ட மகளிர் சுய உதவி குழுக்களுக்கு மறுபடியும் கடன் உதவி செய்து பெண்கள்முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகித்து வருகின்றார்

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை எல்லோருக்கும் கிடைக்கும் படி செய்து பெண்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளார்.

அவர் வழியில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு துறையை மேம்படுத்தும் வகையில் இளைஞர், இளம் பெண்கள் பங்கேற்று சிறப்பாக விளையாட விளையாட்டு துறையில் பல்வேறு விளையாட்டு அரங்கங்களை அமைத்து வருகிறார்கள்

நாடே போற்றும் வகையில் மதுரையில் உலகத்தரம் வாய்ந்த ஹாக்கி மைதானம் அமைத்து அதில் தேசிய அளவிலான இளையோர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டிகளையும் நடத்தி மதுரை மக்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தினார்

எல்லோருக்கும் எல்லாம் எனும் திராவிட மாடல் ஆட்சி தொடர்ந்து ஏழாவது முறையாகவும் நம் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாகவும் ஆட்சி அமைப்பது உறுதி என்பதை மெய்ப்பிக்கும் வகையில் நாளுக்கு நாள் மக்கள் ஆதரவு பெருகி வருகின்றது.

எனவே திராவிட மாடல் ஆட்சி தொடரும் என்பதில் மாற்றமில்லை என்று பேசினார்.

கிராமம் கிராமமாக சென்ற அமைச்சர் பி.மூர்த்திக்கு பெண்கள் ஆரத்தி எடுத்தும், மலர் தூவியும், கழகத்தினர் மலர் மாலை அணிவித்தும் வானவேடிக்கை வெடித்து, முரசு கொட்டு முழங்க சிறப்பான வரவேற்பு கொடுத்தார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் ஆ. வெங்கடேசன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், மாவட்டப் பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் ஆசை கண்ணன், ஒன்றிய செயலாளர்கள் அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், மதிவாணன், ஹக்கீம், தலைமை கழக வழக்கறிஞர் கலாநிதி, மாநில இலக்கிய அணி நேருபாண்டியன், முன்னாள் ஒன்றிய சேர்மன் வீரராகவன், மாவட்ட பிரதிநிதி அழகுபாண்டி, வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம். இளங்கோ, முன்னாள் துணை சேர்மன்கள் பாலாண்டி, கார்த்திக் ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் வடிவேல் முருகன், மாவட்ட விவசாய தொண்டர் அணி அமைப்பாளர் ஒத்தக்கடை சரவணன், பகுதி செயலாளர்கள் பெ.சசிகுமார், மருது பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் பரவை மனோகரன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், அனைத்து துறை அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) பணிமனை நிர்வாகிகள் தேர்தல் இறுதி வேட்பாளர்கள் பட்டியல் 03.01.2026 அன்று வெளியிடப் படுவதாக 25.12.2025 அன்று அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தொடர் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாலும், தொடர்ந்து பண்டிகை காலமாக இருப்பதால் பேருந்துகள் இயக்கம் பாதிக்கப்படாமலிருப் பதற்காகவும் மேலும் கால அவகாசம் தேவைப்படுவதாக தேர்தல் ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளதால் 24.01.2026 அன்று இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்படும்.


தேவைப்படின் பணிமனைகள் தோறும் வாக்குப் பதிவு 31.01.2026 அன்று காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும்.

**கலைஞரகம்**
சென்னை 17.
நாள் :01,01.2026.

**மு.சண்முகம் EX.MP**
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ம.த. மல்லையன்
### சனவரி 3 (2014)



**தந்தை பெரியார்,
பேரறிஞர் அண்ணா,
தலைவர் கலைஞர் ஆகியோர்
வழிநின்று கம்பம் பகுதியில் கழகம்
வளர்த்தவர்.**

**க.புதுப்பட்டி பேரூராட்சி மன்றத்
தலைவராக தொடர்ந்து பதினைந்து
ஆண்டுகளாகப் பொறுப்பு வகித்து,
அறிஞர் அண்ணா முதல்வராக
இருந்த சமயத்தில் அப்பகுதியில் அரசு
உயர்நிலைப் பள்ளியும் – தலைவர்
கலைஞர் முதல்வராக இருந்த போது
எண்ணற்ற நலத்திட்டங்களையும்
கொண்டு வந்து அப்பகுதி மக்களிடம்
கழகத்திற்கு நற்பெயரைப்
பெற்றுத் தந்தவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம்,
விலைவாசி உயர்வு எதிர்ப்பு
போராட்டம் மற்றும் கழகம் நடத்திய
அனைத்துப் போராட்டங்களிலும்
பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்
தி.மு.க.**

# வணங்குவதற்கு அடிக்கடி ‘கால்களை’ மாற்றும் எடப்பாடி பழனிசாமி!

திருப்போரூர், கும்மிடிப்பூண்டி ஆகிய கூட்டத்தில் பேசிய எடப்பாடி, “ரகுபதி என்று ஒருவர் இருக்கிறார். வேஷ்டியை மாற்றுபவர், அன்றைக்கு ஒரு எட்டப்பன், இன்றைக்கு ரகுபதி, துரோகத்தின் வடிவமாக இருக்கிறார்” என்று எடப்பாடி பேசியுள்ளார்.

“தான் திருடி பிறரை நம்பமாட்டாள்” என்கிற கதையாக, ஈயத்தை பார்த்து இளித்ததாம் பித்தளை என்கிற கதையாக பேசி இருக்கிறார்.

“அழகுக்கு மறுபெயர் பெண்ணா அல்லி மலருக்கு மறுபெயர் கண்ணா - தமிழுக்கு மறுபெயர் அமுதா”என்பதுபோல்துரோகத்துக்கு மறுபெயர் எடப்பாடிதான்.

முதலில் ஜெயலலிதா கால், சசிகலா கால், ஓ.பி.எஸ். கால், இப்போது மோடி, அமித்ஷா கால் என, விழுவதற்கு கால்களை அடிக்கடி மாற்றிக் கொள்பவர் எடப்பாடி, ரகுபதியின் குற்றச்சாட்டுக்கு பதில் கூறாமல் அவரை கட்சிமாறினார் என்று மட்டும் சொல்வது நியாயமா?

தந்தை பெரியார், காங்கிரஸ் மாநில தலைவராக இருந்த போது, கருத்து வேறுபாடால் திராவிடர் கழகம் ஆரம்பித்ததோடு, கருப்பு - சிவப்புக்கு மாறியவுடன், ஏன் மாறினீர்கள் என கேட்பது முட்டாள்தனமானது.

உதயசூரியனில் நின்று வெற்றி பெற்றுவிட்டு, கருப்பு சிவப்பு வேட்டியை உழைக்கும் கரங்கள், உரிமைக்குரல் படம் வரை கட்டிவிட்டு, கருப்பு, வெள்ளை, சிவப்பு கரை வேட்டி ஏன் கட்டினாய் என எம்.ஜி. ஆரை கேட்கமுடியுமா?

தனக்கு அடைக்கலம் தந்த சசிகலா அம்மையாரையே கட்சியை விட்டு நீக்கிய எட்டப்பன் துரோகி பழனிசாமி.

1989-ல் தனக்கு எம்.எல்.ஏ. சீட் பெற காரணமாக இருந்த நடராஜன் மரணத்திற்கு கூட தானும் செல்லாமல், அ.தி.மு.க. அமைச்சர்களையும், கட்சிக்காரர்களையும் போகவிடாமல் செய்த நன்றி கெட்ட எட்டப்பன் பழனிசாமி.

செங்கோட்டையனை முதல்வராக்க நினைத்திருந்த சசிகலா அம்மையாரிடம், தனக்காக பல கோணங்களில் பேசிப் புரிய வைத்து தன்னை முதல்வராக்கிய தினகரனை வழக்கில் மாட்டிவிட்டு, கட்சியை விட்டு தூக்கி வீசிய துரோகி எட்டப்பன்தான் எடப்பாடி.

தன்னை அரசியலுக்கு கொண்டு வந்த செங்கோட்டையனையே கட்சியை விட்டு நீக்கிய துரோகி பழனிசாமி.

தன்னை மெருகேற்றிய தலைவி ஜெயலலிதாவால் 5 ஆண்டு காலத்திற்கு சட்டமன்ற உறுப்பினராக பணிபுரிய அனுமதித்த 18 சட்டமன்ற உறுப்பினர்களின் இரண்டாண்டு பதவி பறிப்புக்கு காரணமாக இருந்த துரோகி எட்டப்பன் எடப்பாடி.

தினகரன் வெளியேறிய சூழலில் தனது 11 ஆதரவு எம்.எல்.ஏ.க்களின் ஆதரவுடன் வந்து, ஆதரவு தந்து, எடப்பாடி ஆட்சியை கவிழ்ந்து விடாமல் காப்பாற்றிய ஓ.பி.எஸ்.ஸை கட்சியை விட்டு நீக்கிய துரோகி எட்டப்பன்தான் பழனிசாமி.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
கழக வர்த்தகர் அணிச் செயலாளர்

37 எம்.பி.-க்கள் - தமிழக ஆட்சியுடன் வந்து பொறுப்பேற்று விட்டு, இன்று 0-வாக பத்து தோல்வி பழனிசாமி என்கிற பட்டத்துடன் அ.தி.மு.க. விற்கே துரோகம் செய்திட்ட எட்டப்பன் எடப்பாடி.

2024 நாடாளுமன்ற தேர்தல் வரை தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்துவிட்டு, தேர்தலுக்கு சில வாரமே இருக்க, பா.ஜ.க.வை கழட்டிவிட்டு, பா.ஜ.க.வுக்கு துரோகம் செய்த எட்டப்பன் எடப்பாடி மற்றவர்களை சொல்வது, ஆலமரத்தைப் பார்த்து, காற்று அடித்தால் அடிக்கடி வளையாதே என நாணல் சொன்னது மாதிரி உள்ளது.

தேர்தல் நேரத்தில் வாக்குறுதி என்பது, ஆள்பாதி - ஆடைபாதி போல.

தேர்தலில் சொன்னது ஒன்றிரண்டு விடுபட்டும் போகலாம். சொல்லாத பல திட்டங்கள் செயலுக்கும் வரலாம்.

தங்கத் தளபதி கொண்டு வந்த 20 லட்சம் குழந்தைகளுக்கு காலை உணவு என்பது உலக வரலாற்றில் புதியது.

தாயுமானவர் திட்டம், வீடு தேடி மருத்துவம், நலன் காக்கும் ஸ்டாலின் என ஆஞ்சநேயர் வாலைக் காட்டிலும், திரௌபதி சேலையை காட்டிலும் ஒன்றிய அரசின் ஒத்துழைப்பே இல்லாமல் தமிழ்நாட்டில் புதிய புதிய திட்டங்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

தேர்தல் வாக்குறுதிகளுக்குத்தான் வாக்கு என்றால் நாங்கள் மகளிருக்கு, கலைஞர் மகளிர் உரிமைத்தொகையாக ரூபாய் ஆயிரம் வழங்குவதாக கூறிய 5 நாள் கழித்து அ.தி.மு.க. நாங்கள் வந்தால் ரூ. 1,500 தருகிறோம் என்றீர்களே மக்கள் உங்களுக்கா ஓட்டு போட்டார்கள்? தளபதிக்குத்தானே போட்டார்கள். சொல்வது பெரிது - சொல்கின்ற ஆளையும் பார்ப்பார்கள்.

தி.மு.க.வினர் “கூட்டணியை பற்றித்தானே சொன்னார்கள், எங்களைப் பற்றியா குறை சொன்னார்கள்” என்கிறார் எடப்பாடி.

நீங்கள் கார் மாறி, கார் மாறி முகத்தை மூடிக்கொண்டு அமித்ஷாவை பார்க்கப் போனதை நாங்கள் சொல்லவில்லையா?

சம்பந்தியைக் காப்பாற்ற, நெடுஞ்சாலை துறை காண்டிராக்ட் 4800 கோடி ரூபாய் ஊழல் வழக்கிற்காகத்தான் பா.ஜ.க. கூட்டணிக்கே சென்றீர்கள் என்று தி.மு.க. உங்களை நோக்கி சொல்லவில்லையா?

பரதேசிக்கு ‘பார்ப்பவனை எல்லாம் பரதேசி’ எனக் கூறத்தோன்றும். அதுபோல அமாவாசைக்குத்தான் எல்லாம் அம்மாவாசையாகத் தெரியும் என நாங்கள் உங்களை நோக்கிச் சொல்லவில்லையா?

அடுத்த கட்சியின் துண்டை தன் கட்சித் தோழருக்கு அணிவித்து வரச்சொல்லிவிட்டு கூட்டணி கண்ணுக்கு தெரிய ஆரம்பித்துவிட்டது என கூறிய மகா பெரிய மோசடிக்காரர் எடப்பாடி என நாங்கள் உம்மைப் பார்த்துச் சொன்னதில்லையா?

### மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம் கோட்டப்பூண்டி, செக்கடி குப்பத்தில்

# “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பரப்புரை நிகழ்ச்சி!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*செஞ்சி, ஜன. 3 -*

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்ட மன்றத் தொகுதி மேல் மலையனூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை நிகழ்ச்சி கோட்ட பூண்டி, செக்கடிகுப்பம் ஆகிய கிராமத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குமேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் குமார் முன்னிலை வகித்தார். மேல்மலையனூர் ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி அணி அமைப்பாளர் சதீஷ் அனைவரும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பரப்புரை நிகழ்ச்சி தொடங்கி வைத்தார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில் :

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் செய்த சாதனைகளை மிஞ்சும் அளவிற்கு இன்று பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

அந்த வகையில் மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் 48. நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம், உங்களுடன் ஸ்டாலின் திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம், புதுமைப்பெண், தமிழ் புதல்வன் திட்டங்கள், தாயுமானவர் திட்டம், அன்பு கரங்கள் திட்டம் போன்ற உன்னதமான திட்டங்களை உலகமே பாரட்டும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தி வருவதாக தெரிவித்த அவர் முதலமைச்சரின் சாதனைகளையும் திட்டங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில்மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி, ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் செல்வம் , ஒன்றிய நிர்வாகிகள் உதயகுமார், எஸ். பி.சம்பத், தாஹிரா அப்துல்வகாப், ஜி.பி.எஸ்.முருகன், தோப்பு சம்பத், இளைஞரணி அமைப்பாளர் மணிகண்டன், துணை அமைப்பாளர் சக்திவாசன், ஊராட்சி நிர்வாக்கள் ரமேஷ், ராஜேந்திரன், சண்முகம், அன்பழகன், கண்ணன், ஸ்ரீதர், சக்கரவர்த்தி, லோகு, வசந்தகுமார், மகளிர் அணி அருள்மொழி, உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




விழுப்புரம் வடக்கு மாவட்டம் வல்லம் மத்திய ஒன்றியம் களையூர் ஊராட்சியில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கபடி போட்டியில் முதலிடம் பிடித்த அணிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வெற்றி கோப்பையுடன் பத்தாயிரம் ரூபாய் பரிசினை வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர் இளம்வழுதி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் கார்வண்ணன் உள்ளனர்.